ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1918/8 - 2015 ජුනි මස 09 වැනි අඟහරුවාදා - 2015.06.09

1918/8 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 21/78 (xiii)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 23 (2) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2015, யூன் 09.

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2015 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழக (திருத்த) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படுவதன் மீது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 2013 ஆம் ஆண்டின் திசெம்பர் 5 ஆந் திகதிய 1839/41 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் சனவரி 5 ஆந் திகதிய 591/18 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழக கட்டளைச் சட்டமானது அதன் 16 ஆம் பந்தியில் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(1) திறந்த பல்கலைக்கழகமானது பின்வரும் பீடங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) மானிடவியல் சமூக விஞ்ஞான பீடம் ;

(ஆ) இயற்கை விஞ்ஞான பீடம் ;

(இ) பொறியியல் தொழில்நுட்பவியல் பீடம் ;

(ஈ) கல்விப் பீடம் ; அத்துடன்

(உ) சுகாதார விஞ்ஞான பீடம்.";

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) (6), (7) மற்றும் (8) ஆம் உட்பந்திகளை முறையே (7), (8) மற்றும் (9) ஆம் உட்பந்திகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) (5) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தி (6) இனை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(6) சுகாதார விஞ்ஞான பீடமானது பின்வரும் கற்கைப் பிரிவுகளைப் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) தாதியர் ;

(ii) மருந்தகம் ;

(iii) மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் ;

(iv) அடிப்படை விஞ்ஞானம் ;

(v) உளவியல் மற்றும் ஆலோசனை ; அத்துடன்

(vi) சுகாதாரக் கல்வி மற்றும் ஆராய்ச்சி.".

6 - 606

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.